
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 150 | 4 Pages | 2.1.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 150 | 4 பக்கங்கள் | 2.1.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஜப்பானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் சுனாமி எச்சரிக்கை





டோக்கியோ, ஜன.2

ஜப்பான் நாட்டின் மேற்கு பகுதியில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்திய நேரப்படி மதியம் 12.40 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.2 ஆக பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஹோன்ஷி அருகே 13 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் 5 மீட்டர் உயரத்திற்கு கடல் அலைகள் எழும் என அந்நாட்டு அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் அதிர்ச்சி அடைந்த கடலோர பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

## சிரியா மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்: 8 பேர் பலி




டமாஸ்கஸ், ஜன.2

இஸ்ரேல் ஹமாஸ் இடையேயான போர் 2 மாதங்களுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. மேலும், லெபனானில் ஹிஸ்புல்லா, ஏமனில் ஹவுதி உள்ளிட்ட கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது.

அதேபோல், சிரியாவில் பஷிர் அல் அசாத் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் அவரது ஆட்சிக்கு ஈரான் அரசு ஆதரவு அளித்து வருகிறது. அதேவேளை, ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள், ஆயுதக்குழுக்கள் சிரியா, ஏமன், லெபனான் போன்ற நாடுகளில் இருந்தவாறு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில், சிரியாவின் அலிப்போ நகரில் உள்ள சர்வதேச விமான நிலையம் அருகே இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் 5 பேர் உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

## முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதற்கான அனுமதியை விரைவுபடுத்த கேரளா வலியுறுத்தல்



திருவனந்தபுரம்:, ஜன.2

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் அமைந்துள்ளது முல்லை பெரியாறு அணை. இந்த அணையை தமிழக பொதுப்பணித்துறை பராமரித்து வருகிறது.

126 ஆண்டுகள் பழமையான இந்த அணையின் அதிகபட்ச நீர்மட்ட விவகாரம் தொடர்பாக தமிழகம் மற்றும் கேரள மாநிலத்திற்கு இடையே பிரச்சினை இருந்து வருகிறது. அணையின் கட்டமைப்பு உறுதித்தன்மை மற்றும் அது தொடர்பாக அம்சங்கள் தொடர்பாக இரு மாநிலங்களும் சட்ட போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

பாதுகாப்பு காரணங்களுக்காக தற்போதுள்ள அணைக்கு பதிலாக புதிய அணை கட்ட வேண்டும் என்று கேரளாவில் பிரசாரம் செய்யப்பட்டது. இதையடுத்து முல்லை பெரியாறில் புதிய அணை கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை தயாராகி வருகிறது. மத்திய நீர் ஆணையத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க திருத்தப்பட்ட விரிவான திட்ட அறிக்கை தயாராகிறது. இந்த அறிக்கை மார்ச் மாதத்துக்குள் தயாராகிவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அணையில் இருந்து 366 மீட்டர் தொலைவில் புதிய அணையை கட்டுவதற்காக வடிவமைப்பை பொறியியல் வல்லுனர்கள் சமீபத்தில் நிறைவு செய்துள்ளனர். கடந்த 2011ம் ஆண்டு கேரள அரசு புதிய அணை கட்டுவதற்கான திட்ட அறிக்கையை தயார் செய்தது.

அதன்பிறகு மத்திய நீர் ஆணையம் புதிய அணை கட்டுவதற்கான தொடர் வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்தியது. கடந்த திட்ட அறிக்கையில் குறிப்பிட்டதை விட அனைத்தின் விலைகளும் அதிகரித்துள்ளது.இந்நிலையில்புதியஅணைகட்டுவதற்கானஅனுமதியை விரைவு படுத்தக்கோரி கேரள அரசு வலியுறுத்தி உள்ளது. இதற்காக மத்திய நீர்ஆணையத்தை கேரளமாநில அரசுகடந்த வாரம் அணுகியது. அப்போது புதிய அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க விரும்புவதாக கேரள அரசு தெரிவித்துள்ளது.

# பொங்கல் பண்டிகையையொட்டி உடுமலையில் மண்பானைகள் தயாரிப்பு பணி தீவிரம்

உடுமலை, ஜன.2

தமிழா்களின்பாரம்பரியம்,பண்பாட்டை வெளிப்படுத்தும் பொங்கல் பண்டிகை ஆண்டுதோறும் தை மாதம் முதல் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. அப்போது அரிசி, வெல்லம், நெய் சேர்த்து புதுப்பானையில் பொங்கலிட்டு சூரிய பகவானுக்கும், கால்நடைகளுக்கும் படைத்து கொண்டாடுவது தமிழா்களின் மரபாகும்.



முன்னோர்கள் காலத்தில் இருந்தே புதிய பானையில் பொங்கலிடுவது வழக்கம். இந்நிலையில் பொங்கல் பண்டிகைக்கு சில நாட்களே உள்ள நிலையில் பொங்கல் வைக்க பயன்படுத்தப்படும் மண்பானைகள் தயாரிக்கும் பணி திருப்பூர் மாவட்டம் உடுமலை பகுதியில் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதற்காக மண்பாண்ட தொழிலாளர்கள் பல்வேறு விதமான பொங்கல் பானைகளை உற்பத்தி செய்து வருகின்றனர்.

மண் பானையில் செய்யப்படும் பொங்கல் சத்தானதாகவும், சுவையானதாகவும் இருக்கும் என்பதால் மண்பானைகளும் தற்போது முக்கியத்துவம் பெற்று வருகிறது.

இதனால் வியாபாரம் அதிகரிக்கும் என்பதால் மண்பானை உற்பத்தி செய்வதில் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். தமிழக அரசு பொங்கலுக்கு தேவையான கரும்பு, பச்சரிசி, சக்கரை உள்ளிட்டவைகளை இலவசமாக வழங்கி வருகின்றது. இந்நிலையில் பொங்கல் தொகுப்புடன் சேர்த்து மண்ணால் செய்யப்பட்ட அடுப்பு மற்றும் மண்பானை வழங்க முன்வர வேண்டும். இதனால் மண்பானை தொழில் மேம்படும் என்று மண்பாண்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொங்கல் தொகுப்பில் முழு கரும்பு வழங்கவும், விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்யவும் தமிழக அரசு முன்வர வேண்டும்: ஜி.கே.வாசன்

சென்னை,ஜன.2

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து இருப்பதாவது:

தமிழக அரசு வழங்க இருக்கும் பொங்கல் தொகுப்பானது விவசாயிகளின், பொது மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் இருக்க வேண்டும். பொங்கல் தொகுப்பில் குறைந்த பட்சம் ரூ. 1,500 மற்றும் முழு கரும்பு ஒன்று அவசியம் இடம் பெற வேண்டும்.



குறிப்பாக இயற்கை சீற்றத்தால் சென்னை மற்றும் தென் மாவட்டங்கள் உள்ளிட்ட மற்ற மாவட்டப் பகுதிகளில் பெய்த கனமழை, பெரு வெள்ளம் போன்றவற்றால் விவசாயிகள், பொது மக்கள் பாதிக்கப்பட்டதை கவனத்தில் கொண்டு அதற்கேற்ப இந்த வருடப் பொங்கலுக்கு பொங்கல் தொகுப்பை சற்று கூடுதலாக கொடுக்க வேண்டும்.

கரும்பை கட்டாயமாக விவசாயிகளிடம் இருந்து நேரிடையாக கொள்முதல் செய்ய வேண்டும். பொங்கல் தொகுப்பில் உள்ளவை தரமானதாக, பயனுள்ள வகையில் இருப்பதை முன்னதாகவே தமிழக அரசு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் தரமற்ற பொருட்கள் இடம் பெற்றது போல் மீண்டும் நடைபெறக்கூடாது. மேலும் தமிழக அரசு, பொங்கல் தொகுப்பை உடனடியாக அறிவித்து, அதனை முன்னேற்பாடாக வாங்கி, இருப்பில் பாதுகாப்பாக வைத்து, பொங்கலுக்கு முன்னதாக கொடுக்க வேண்டும்.

தமிழக அரசு, தமிழர்களின் மிக முக்கியமான பண்டிகையான பொங்கலை மகிழ்ச்சியாக கொண்டாடுவதற்கு ஏதுவாக பொங்கல் தொகுப்பை அறிவித்து, விரைவில் வழங்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்து உள்ளார்.

# கோவிலையும் இந்து மதத்தையும் காட்டி தமிழ்நாட்டில் பாஜகவால் ஓட்டு வாங்க முடியாது: வைகோ



சென்னை, ஜன.2

சென்னையில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ சுதந்திர இந்தியாவில் நெருக்கடி நிலையைவிட மோசமான சட்டங்களை பா.ஜ.க. அரசு கொண்டு வந்திருக்கிறது.

★ எதிர்க்கட்சிகள் உருவாக்கி இருக்கும் இந்தியா கூட்டணி, மக்கள் சக்தியைத் திரட்டி மோடி அரசை ஆட்சி பீடத்திலிருந்து அகற்றும்.

★ தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் வெற்றிகரமாக நடைபெறுகிறது.

★ இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய இடத்தில் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சி இருக்கிறது.

★ கோவிலையும் இந்து மதத்தையும் காட்டி தமிழ்நாட்டில் பாஜகவால் ஓட்டு வாங்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின் உற்பத்தி பாதிப்பு



பொன்னேரி, ஜன.2

மீஞ்சூரை அடுத்த அத்திப்பட்டில் வடசென்னை அனல்மின் நிலையம் உள்ளது. இங்குள்ள இரு நிலைகளில் முதல் நிலையின் 3 அலகுகளில் தலா 210 வீதம் 630 மெகாவாட்டும், 2வது நிலையில் உள்ள இரு அலகுகளில் தலா 600 வீதம் 1200 என மொத்தம் 1830 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நிலையில் 2வது நிலையின் 1வது அலகில் உள்ள கொதிகலன் குழாயில் கசிவு ஏற்பட்டது. இதன் காரணமாக அந்த பகுதியில் 600 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. கொதிகலன் குழாயை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

# எண்ணெய் கழிவால் பாதிக்கப்பட்ட பறவைகளை மீட்கும் பணி மேலும் ஒரு வாரம் நீடிக்கும்

திருவொற்றியூர், ஜன.2

மிச்சாங் புயல் காரணமாக பெய்த கனமழையின் போது கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அப்போது மணலியில் உள்ள தனியார் ஆயில் நிறுவனத்தில் இருந்து வெளியேறிய எண்ணெய்கழிவு பக்கிங்காம் கால்வாய் வழியாக கொசஸ்தலை ஆற்றில் கலந்து முகத்துவாரத்தில் கடலில்பரவியது. மேலும் வெள்ளத்தின் போது வீடுகளிலும் படிந்து கடும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்த எண்ணெய்கழிவால் கொசஸ்தலை ஆறு மற்றும் அடையாத்தி காடுகளில் உள்ள ஏராளமான பறவைகளும் பாதிக்கப்பட்டன. அதன் இறக்கைகளில் எண்ணெய் படர்ந்து பறக்க முடியாத சூழல் ஏற்பட்டது.



அதனை வனத்துறையினர் மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்கள் மீட்டு சிகிச்சை அளித்தனர். பறவைகளின் இறக்கைகளில் இருந்த எண்ணெய்கள் 'பிரஷ்' மூலம் அகற்றப்பட்டு விடுவிக்கப்பட்டன.

இதற்கிடையில் எண்ணெய் கழிவால் உடல் முழுவதும் பாதிக்கப்பட்ட 6 கூழைக் கடா பறவைகள் மீட்கப்பட்டு கிண்டி பூங்காவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது முழுவதும் நல்ல நிலையில் உள்ள அந்த பறவைகள் காட்டு பகுதியில் விடுவிக்கப்பட்டு உள்ளது.

எண்ணூர் கடல் பகுதி மற்றும் முகத்துவார பகுதிகளில் எண்ணெய்கழிவின் பாதிப்பு தற்போது குறைந்து இருந்தாலும் மேலும் பல பறவைகள் பாதிக்கப்பட்டு காட்டுப்பகுதி மற்றும் நீர்நிலையில் இருக்கலாம் என்று தெரிகிறது.

இதையடுத்து கொசஸ்தலை ஆற்று பகுதியில் மேலும் ஒரு வாரத்திற்கு கண்காணிப்பு மற்றும் பறவைகள் மீட்பு பணிகள் நடைபெறும் என்று மீட்பு குழுவினர் தெரிவித்து உள்ளனர். இது குறித்து விலங்குகள் நல ஆர்வலர் ஒருவர் கூறும்போது, சுமார் 20க்கும் மேற்பட்ட கூழைக் கடா பறவைகள் எண்ணெய்கழிவில் கடுமையாக பாதிக்கப்பட்டன. அவை மீட்கப்பட்டு விடுவிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. கடந்த வாரத்தில் எங்கள் குழுவினர் பாதிக்கப்பட்ட 11 பறவைகளை நேப்பியர் பாலம் மற்றும் அடையாறு ஆற்று ஓரத்தில் கண்டனர்.

இதன் பின்னர் பாதிக்கப்பட்ட பறவைகளின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரிக்கவில்லை. எனினும் பறவைகள் கண்காணிப்பு மேலும் ஒரு வாரத்திற்கு இருக்கும் என்றார்.

# விஜயகாந்த் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய குடும்பத்தினர்

சென்னை, ஜன.2

ஆங்கில புத்தாண்டையொட்டி கேப்டன் விஜயகாந்த் நினைவிடத்திற்கு வந்த பிரேமலதா விஜயகாந்த், இரு மகன்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.



கேப்டன் நினைவிடத்தில் கதறி அழுத இளைய மகனுக்கு பிரேமலதா ஆறுதல் கூறி தேற்றினார்.

விஜயகாந்த் நினைவிடத்தில் பொது மக்களும் தொடர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அஞ்சலி செலுத்த வந்த பொதுமக்களுக்கு பிரேமலதா விஜயகாந்த் அன்னதானம் வழங்கினார்.

# தி.மு.க. கூட்டணியில் சேருவதற்கு பா.ம.க. முயற்சி: விடுதலை சிறுத்தைகள் கட்சியை இழக்க தி.மு.க. விரும்பவில்லை

சென்னை, ஜன.2

பாராளுமன்ற தேர்தல் வருகிற ஏப்ரல் மாதம் கடைசியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் இப்போதே கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தையை தொடங்க ஆரம்பித்துள்ளது.

இந்த தேர்தலில் மத்தியில் பாரதிய ஜனதா கட்சி தலைமையில் ஒரு அணியும், காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட 26 கட்சிகள் அடங்கிய 'இந்தியா கூட்டணி' மற்றொரு அணியாகவும் களம் இறங்குகிறது.

இந்த கட்சிகள் ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டணி வைக்க மாநில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்த வரை தி.மு.க., காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்டு கட்சிகள், கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகள் ஒரு அணியாக களம் இறங்குகின்றன.



கடந்த தேர்தலில் இந்த கூட்டணியில் இடம் பெற்றிருந்த ஐ.ஜே.கே. கட்சியின் பாரிவேந்தர் இந்த முறை தி.மு.க. கூட்டணியில் இல்லை என்பது முடிவாகிவிட்டது. அதற்கு பதில் கமல்ஹாசன் கட்சியான மக்கள் நீதி மய்யம் தி.மு.க. கூட்டணியில் இடம் பெறும் என தெரிகிறது.

இந்த நிலையில் எதிர் அணியில் பா.ஜனதாவுடன் அ.தி.மு.க. கூட்டணி கிடையாது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக அறிவித்துள்ளதால் இந்த கூட்டணியில் இடம் பெற்றுள்ள பா.ம.க. பா.ஜனதாவுடன் கூட்டணி சேருமா? அல்லது அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்குமா? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

பா.ம.க.வை பொறுத்த வரை எந்தக்கூட்டணி வலுவாக உள்ளதோ அந்த கூட்டணியில் சேர்ந்து வெற்றி பெறுவதற்கு தான் முன்னுரிமை அளிக்கும்.

அந்த வகையில் பார்க்கும்போது அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்குமா? அல்லது பா.ஜனதாவுடன் கூட்டணி வைக்குமா? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த இரு கட்சிகளும் தனித்தனியாக மோதும் நிலையில் பா.ஜனதா பக்கம் செல்வதா? அல்லது அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதா? என்ற தடுமாற்றத்தில் பா.ம.க. நிலை உள்ளது.

இதனால் இரு கட்சிகளையும் தவிர்த்து விட்டு தி.மு.க. கூட்டணிக்கு செல்லலாமா? என்று பா.ம.க. காய் நகர்த்துவதாக அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகிறது.

இதற்கு அச்சாரமாக பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கடந்த 2 நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை கோட்டைக்கு சென்று சந்தித்து தமிழக நலன் சார்ந்த விசயங்கள் குறித்து பேசி விட்டு வந்துள்ளார். அது மட்டுமின்றி ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தவும், வன்னியர்களுக்கு 10.5 சதவீத இட ஒதுக்கீடு குறித்தும் வலியுறுத்தி உள்ளார்.

அ.தி.மு.க பா.ஜனதா கூட்டணி இல்லை என்றாகி விட்ட நிலையில், தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி வலுவான கூட்டணியாக தெரிவதால் இங்கு சேர வாய்ப்பு இருக்குமா? என்ற எண்ணத்திலேயே டாக்டர் ராமதாஸ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து இருக்கலாம் என்று தி.மு.க. நிர்வாகிகள் பலர் பேசி வருகின்றனர்.

இது பற்றி தி.மு.க. மேலிட மூத்த நிர்வாகியிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:

பாராளுமன்ற தேர்தலை பொறுத்த வரை தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள கட்சிகள் தான் இந்த தேர்தலிலும் தொடரும். இதில் பாரிவேந்தர் கட்சியான ஐ.ஜே.கே. கட்சி மட்டும் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறிவிட்டது. அதற்கு பதில் கமல்ஹாசன் கட்சி இங்கு கூட்டணி அமைக்க வாய்ப்பு உள்ளது.

பா.ம.க. வை பொறுத்த வரை தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க முயற்சி செய்கிறார்கள் என்பது உண்மை தான்.

ஆனால் அவர்களுக்கு தொகுதி ஒதுக்கும் அளவுக்கு இங்கு 'சீட்' இல்லை அப்படியே பா.ம.க.வை கூட்டணியில் சேர்ப்பதாக இருந்தால் விடுதலை சிறுத்தைகள் கட்சி அதை ஏற்குமா? என்பது கேள்வி தான்.

ஏனென்றால் பா.ம.க.வுக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் முரண்பாடு உண்டு. பா.ம.க. வந்தால் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஏற்பார்களா? என தெரியாது. நாங்களும் விடுதலை சிறுத்தைகள் கட்சியை இழக்க விரும்பவில்லை.

பா.ம.க. வை பொறுத்த வரை பா.ஜனதா தலைமையிலான கூட்டணியை தான் விரும்புவார்கள். ஆனால் அந்த கூட்டணியில் அ.தி.மு.க. இல்லை என்பதால் பா.ஜனதா கூட்டணி இங்கு வெற்றி பெறுமா? என்ற ஐயப்பாடு அவர்களுக்கு உண்டு.

அதனால் பா.ம.க. இந்த தேர்தலில் எந்த பக்கம் செல்லும் என்பது இனி மேல் தான் தெரியவரும்.

தி.மு.க கூட்டணியை பொறுத்த வரை இந்தந்த கட்சிகள் என்று முடிவு செய்து வைத்துள்ளோம். அதன்படி தான் கூட்டணி இருக்கும். ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை தொகுதிகள் என்பது கூட ஓரளவு முடிவு செய்துவிட்டோம்.

எனவே தி.மு.க. கூட்டணியை பொறுத்தவரை ஏற்கனவே உள்ள கூட்டணி கட்சிகளுக்கு போட்டியிடும் தொகுதிகள் வேண்டுமானால் மாறலாம் எண்ணிக்கை மாற வாய்ப்பு இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# கிளாம்பாக்கம் புதிய பஸ் நிலையத்தில் குழம்பி தவிக்கும் பயணிகள்



வண்டலூர், ஜன.2

சென்னை நகருக்குள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் புதிய பஸ் நிலையம் திறக்கப்பட்டு உள்ளது.

அதிநவீன வசதியுடன் அழகிய வடிவத்தில் கட்டப்பட்டு உள்ள இந்த பஸ் நிலையத்தில் இருந்து தென்மாவட்டத்துக்கு செல்லும் அனைத்து பஸ்களும் இயக்கப்படுகிறது.

பஸ் நிலையத்தின் உள்ளே நுழைய மாநகர பஸ்கள் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் விரைவு பஸ்களுக்குதனித்தனி வாயில்கள் உள்ளன. மேலும் இந்த 2 பஸ்களும் நிறுத்தும் இடங்களுக்கு இடையேயான தூரம் அதிகம் உள்ளதால் வெளியூர்களில் இருந்து அதிக உடைமைகளை கொண்டு வரும் பயணிகள் மாநகர பஸ்கள் இருக்கும் இடத்திற்கு செல்ல கடும் சிரமம் அடைந்து வருகிறார்கள். அவர்கள் குடும்பத்தினருடன் எங்கே செல்வது என்று தெரியாமல் கஷ்டப்பட்டு நடந்து செல்லும் நிலை உள்ளது.

பஸ் நிலையத்தில் முதியோர், மாற்றுத்திறனாளிகள் எளிதில் செல்லும் வகையில் பேட்டரி கார் வசதி உள்ள நிலையில் அவை அதிகாலை நேரத்தில் பயன்பாட்டில் இல்லை. இதனால் பயணிகள் அவதி அடையும் நிலை உள்ளது.

மேலும் சில பயணிகள் விரைவு பஸ்களில் ஏற்கனவே கோயம்பேடு வரை டிக்கெட் முன்பதிவு செய்து உள்ள நிலையில் கிளாம்பாக்கத்தில் இறக்கி விடப்படுவதால் அவர்கள் டிரைவர், கண்டக்டர்களிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்று காலையில் 2வது நாளாக சில பயணிகள் கண்டக்டரிடம் இதுபற்றி கேட்டு கேள்வி எழுப்பினர்.

இதேபோல் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இறங்கிய பயணிகள் ஓட்டேரி மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளுக்கு செல்ல எப்போதும் பரபரப்பாக காணப்படும் ஜி.எஸ்.டி. சாலையை ஆபத்தான முறையில் கடந்து செல்கின்றனர். இதனால் விபத்து அபாயம் ஏற்பட்டு உள்ளது. எனவே இந்த பகுதியில் நடை மேம்பாலம் உடனடியாக அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள், பயணிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

மேலும் ஜி.எஸ்.டி. சாலையில் ஆட்டோக்கள், கார்கள் நிறுத்த இடம் ஒதுக்கப்பட வேண்டும். இல்லையெனில், பஸ் நிலையம் முழுமையாக செயல்படும்போது போக்குவரத்து நெரிசல் ஏற்படும் நிலை ஏற்படும்.

இதேபோல் சர்வீஸ் சாலையில் இருந்து வரும் வாகனங்கள் மற்றும் வண்டலூர் மேம்பாலத்தில் இருந்து இறங்கும் வாகனங்கள் ஒரே நேரத்தில் பஸ் நிலையத்திற்குள் நுழைவதால் வரும் நாட்களில் அதிக அளவில் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும். இதில் தேவையான நடவடிக்கை எடுக்காவிட்டால் அந்த இடம் மற்றொரு பெருங்களத்தூர் சந்திப்பாக மாறிவிடும் என்று பயணி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து போக்குவரத்து அதிகாரி ஒருவர் கூறும்போது, கோயம்பேடு வரை செல்ல கவுண்டரில் நேரடியாக டிக்கெட் முன்பதிவு செய்தவர்களுக்கு கூடுதல் பணம் பஸ்சிலேயே கண்டக்டர் மூலம் திரும்ப வழங்கப்படும். 'ஆன்லைனில் முன்பதிவு செய்தவர்களுக்கு பணத்தைத் திரும்பப்பெற சில நாட்கள் ஆகும் என்றார்.

பயணிகள்கூறும்போது, கிளாம்பாக்கம் புதிய பஸ் நிலையம் விமான நிலையம் போன்று கட்டப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை சித்தரிக்கும் ஓவியங்கள் அனைவரையும் கவர்ந்து உள்ளது. இங்குள்ள ஒரு சில உணவகங்களைத் தவிர பெரும்பாலான கடைகள் இன்னும் திறக்கப்படவில்லை.

இதனால் உணவு மற்றும் அடிப்படை தேவைகளுக்கு தவிக்கும் நிலை உள்ளது. குடிநீர் குழாய்களிலும் தண்ணீர் வரவில்லை. புதிய பஸ் நிலையம் இன்னும் முழுமையாக செயல்பாட்டுக்கு வராத நிலையில் தொடரும் குழப்பத்தால் பொதுமக்களும், பயணிகளும் தவித்து வருகிறார்கள். பஸ் நிலையத்தில் இறங்குபவர்கள் விரைந்து மாநகர பஸ்களுக்கு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையெனில் வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள் என்றனர்.

சி.எம்.டி.ஏ.அதிகாரி ஒருவர் கூறும்போது, பஸ் நிலையம் அருகே உள்ள சர்வீஸ் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு பஸ்கள் எளிதில் சென்று வர ஏற்பாடு செய்யப்படும். ஜி.எஸ்.டி. சாலையில் பயணிகள் சாலையைக் கடக்கவும், பஸ்நிலையத்திற்கு பயணிகள் பாதுகாப்பாக வந்து சேரவும் அப்பகுதியில் போக்குவரத்து காவலர் நியமிக்கப்படுவார். அப்பகுதியில் நடைமேம்பாலம் அமைக்கும் பணி விரைவில் தொடங்க உள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளும் விரைவில் நடைமுறைக்கு வரும் என்றார்.

# தமிழகம் முழுவதும் அரிசி விலை திடீர் உயர்வு

திருச்சி: ஜன.2

திருச்சி மாவட்டத்தில் சாகுபடி மையங்களில் இருந்து நெல் வரத்து குறைந்துள்ளதால் அரிசி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

திருச்சி மணச்சநல்லூர் அரியமங்கலம், காட்டூர் ஆகிய பகுதிகளில் ஏராளமான அரிசி ஆலைகள் உள்ளன. இந்த ஆலைகளுக்கு திருச்சி மட்டுமல்லாமல் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் காவிரி டெல்டா பகுதிகளில் இருந்து நெல் கொண்டுவரப்படுகிறது.

இது தவிர அந்த ஆலைகள் கர்நாடகாவிலிருந்து நெல்லைப் பெறுகின்றன. பல்வேறு இடங்களில் அரிசி கொள்முதல் செய்யும் வியாபாரிகள் உள்ளனர். தற்போது டெல்டா பகுதிகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் நெல் வரத்து குறைந்துள்ள காரணத்தால் திருச்சி மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் அரிசி விலை உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியில் கர்நாடக பொன்னி என்று பிரபலமாக அழைக்கடும் 1 கிலோ ஆர்.என்.ஆர். அரிசி ரூ. 46க்குவிற்கப்பட்டது. ஆனால் தற்போது சில்லறை சந்தைகளில் ஒரு கிலோவுக்கு ரூ. 55 முதல் 60 வரை நிர்ணயிக்கப்பட்டது. இதேபோல், மணச்சநல்லூர் பொன்னியின் விலையும் (ஒரு வருட ரகம்) கிலோ ₹65 ஆக உள்ளது.



மொத்த சந்தையில் பொதுவான அரிசி வகைகளின் விலை (அளவில் பெரியது) கிலோ 46ல் இருந்து 51 ஆக உயர்ந்துள்ளது. தமிழகம் மற்றும் கர்நாடகா ஆகிய இரு மாநிலங்களில் உள்ள சாகுபடி மையங்களில் இருந்து வரத்து குறைவாக உள்ளதால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சில மாதங்களாக டெல்டா பகுதியில் இருந்து வரத்து குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. அதேபோல், கர்நாடகாவில் இருந்து வரத்து குறைந்துள்ளதால், தேவைக்கும் சப்ளைக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் பெரும்பாலும் 2வது போகம் நெல் சாகுபடிக்கு செல்லவில்லை. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. திருச்சி முதல் நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை வரையிலான பெரும்பாலான விவசாயிகள் சம்பா பருவ சாகு படியை மேற்கொள்ளாததால் டெல்டா மாவட்டங்களில் இருந்து நெல் வரத்து மேலும் சரியும் என கூறப்படுகிறது.

இது பற்றி ஆலை உரிமையாளர் ஒருவர் கூறும்போது, எங்களால் எங்கள் ஆலைகளை அதன் திறனுக்கு ஏற்ப இயக்க முடியவில்லை. நெல் பற்றாக்குறை கடந்த ஆண்டை ஒப்பிடும்போது மேலும் 20 சதவீதம் அதிகரித்துள்ளதால் அரிசி விலை உயர்ந்துள்ளது. இது அரிதான நிகழ்வு.

வரும் ஆண்டில் அடுத்த சம்பா பருவம் வரை பொன்னி போன்ற பிரபலமான ரகங்களுக்கான தேவையை பூர்த்தி செய்ய ஆந்திரா, கர்நாடகா மற்றும் தெலுங்கானாவில் இருந்து வரும் சப்ளையை இப்பகுதியில் உள்ள அரிசி ஆலைகள் மற்றும் வணிகர்கள் சார்ந்திருக்க வேண்டும் என்றார்.

இதனால் மேலும் விலை உயர வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# கோவை—பெங்களூர் வந்தே பாரத் ரெயிலில் உற்சாகத்துடன் பயணித்த பயணிகள்

கோவை, ஜன.2

தமிழகத்தில் கோவை சென்னை, நெல்லை சென்னை இடையே வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது.

கோவை சென்னை இடையே இயக்கப்படும் வந்தே பாரத் ரெயிலுக்கு கோவை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மக்களிடம் வரவேற்பு காணப்பட்டது.

கோவையில் இருந்து பெங்களூருவுக்கு தொழில் விஷயமாகவும், வேலைக்காகவும், படிப்பிற்காகவும் பலரும் சென்று வருகின்றனர்.

எனவே கோவை சென்னை வந்தே பாரத் ரெயில் போன்று கோவை பெங்களூரு இடையே வந்தே பாரத் ரெயில் இயக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதனை ஏற்று கோவை பெங்களூருவுக்கு வந்தே பாரத் ரெயில் சேவை கடந்த 30ந் தேதி தொடங்கப்பட்டது. இதனை பிரதமர் மோடி காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து இன்று முதல் கோவை பெங்களூரு வந்தே பாரத் ரெயில் சேவை தொடங்கியது.



அதன்படி இன்று காலை 5 மணிக்கு கோவையில் இருந்து பெங்களூருவுக்கு வந்தே பாரத் ரெயில் புறப்பட்டது. இந்த ரெயிலில் பயணிக்க அதிகாலையிலேயே முன்பதிவு செய்திருந்த பயணிகள் ரெயில் நிலையத்திற்கு வந்து காத்திருந்தனர்.

ரெயில் பிளாட்பாரத்திற்கு வந்ததும், பயணிகள் அனைவரும் டிக்கெட் பரிசோதிக்கப்பட்டு உள்ளே அனுமதிக்கப்பட்டனர். இதனை தொடர்ந்து பயணிகள் அனைவரும் தங்களுக்கு என ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர்ந்து பயணம் செய்தனர்.

இந்த ரெயிலில் பயணம் செய்வது வித்தியாசமாக இருந்ததாக தெரிவித்த பயணிகள் உற்சாகத்துடன் பயணம் மேற்கொண்டனர். ரெயிலில் உள்ள அனைத்து பெட்டிகளும் நிரம்பி வழிந்தது. ரெயில் புறப்பட்டதும், பயணிகளுக்கு ரெயில் நிர்வாகம் சார்பில் காபி மற்றும் திண்பண்டங்கள் வழங்கப்பட்டன.

ரெயிலில் பயணம் செய்த பயணிகள் செல்போனில் புகைப்படமும் எடுத்து கொண்டனர்.

கோவையில் இருந்து 5 மணிக்கு புறப்பட்ட ரெயில் திருப்பூர், ஈரோடு, சேலம், தர்மபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி வழியாக காலை 11.30 மணிக்கு பெங்களூருவை சென்றடைந்தது.

மறுமார்க்கமாக அங்கிருந்து 1.40 மணிக்கு புறப்படும் ரெயில் இரவு 8 மணிக்கு கோவையை வந்தடைய உள்ளது. கோவை பெங்களூரு இடையேயான 380 கி.மீ தொலைவை 6 அரை மணி நேரத்தில் இந்த ரெயில் சென்றடைகிறது. இன்று முதல் தினமும் வந்தே பாரத் ரெயில் இயக்கப்பட உள்ளதால் கோவை பொதுமக்கள் மற்றும் தொழில்துறையினர் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோவை பெங்களூரு இடையேயான வந்தே பாரத் ரெயில் சேவை இன்று முதல் தொடங்கியது. காலை 5 மணிக்கே கோவையில் இருந்து வந்தே பாரத் ரெயில் புறப்பட்டு சென்று விட்டது.

முற்றிலும் குளிரூட்டப்பட்ட இந்த ரெயிலில் சொகுசு பெட்டிகள், சிறப்பு சொகுசு பெட்டிகள் என 2 வகையான பெட்டிகள் உள்ளன.

சொகுசு பெட்டியில் பயணிக்க ஒரு பயணிக்கு ரூ.940ம், சிறப்பு சொகுசு பெட்டியில் பயணிக்க ஒரு நபருக்கு ரூ.1,860ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர ரெயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு காபி, திண்பண்டங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த ரெயில் 6 அரை மணி நேரத்தில் பெங்களூருவை சென்றடையும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# வித்தியாச கட்டணம் நடத்துனர்கள் மூலம் திரும்ப வழங்கப்படும்: அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஜன.2

தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர் வெளியிட்டு உள்ள அறிவிப்பில் கூறி இருப்பதாவது:

அரசு விரைவு போக்குவரத்து கழக பஸ்களில் 30 நாட்களுக்கு முன்னரே முன்பதிவு செய்த பயணிகளிடம் சென்னை கோயம்பேட்டில் இருந்து தென் மாவட்டங்களுக்கும் அதேபோன்று தென் மாவட்டங்களில் இருந்து சென்னை கோயம்பேட்டிற்கும் பயணம் செய்வதற்காக பெறப்பட்ட கட்டணத்தில் தற்போது கிளாம்பாக்கம் வரை மட்டுமே அரசு விரைவு போக்குவரத்து கழக பஸ்கள் இயக்கப்படுவதால் கட்டண வித்தியாசத்தொகை கண்டக்டர்கள் மூலம் பயணம் தொடங்கும்போது ரொக்கமாக திருப்பி அளிக்க உத்தரவிடப்பட்டு உள்ளது.




ஏற்கனவே அவர்களுக்கு வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்ப்பதற்காகவும், அதில் உள்ள சில நடைமுறை சிக்கல்களை தவிர்ப்பதற்காகவும் இவ்வாறு நடைமுறைபடுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# புத்தாண்டின் முதல் சூரிய உதயத்தை காண கன்னியாகுமரியில் திரண்ட சுற்றுலா பயணிகள்

கன்னியாகுமரி: ஜன2

ஆங்கில வருடமான 2023ம் ஆண்டு நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைந்து 2024ம் ஆண்டு மலர்ந்து. இந்த புத்தாண்டையொட்டி சுற்றுலா தலங்களில் புத்தாண்டு கொண்டாட்டம் கோலாகலமாக நடந்தது.

அந்த அடிப்படையில் இந்தியாவின் தென்கோடி முனையில் அமைந்துள்ள உலகபுகழ்பெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமரியிலும் நேற்று இரவு புத்தாண்டு கொண்டாட்டம் ஆடல், பாடல் மற்றும் குத்தாட்டத்துடன் கோலாகலமாக நடந்தது. புத்தாண்டு கொண்டாட்டத்தை முடித்துவிட்டு வெளிநாடு, வெளிமாநிலம் மற்றும் வெளியூர்களில் இருந்து வந்திருந்த சுற்றுலாபயணிகள் இரவு விடுதிகளில் தங்கி இருந்தனர்.



இன்று அதிகாலை இந்த புத்தாண்டின் முதல் சூரிய உதயத்தை காண்பதற்காக கன்னியாகுமரி கடற்கரையில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்திருந்தனர். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சி இருந்தது.

மேகமூட்டத்தினால் இன்று அதிகாலை கன்னியாகுமரி கடலில் சூரியன் உதயமான காட்சி தெள்ளத் தெளிவாக தெரியவில்லை.

இதனால் சுற்றுலா பயணிகள் பலர் காலை 7 மணி வரை காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். இதற்கிடையில் காலை 7.30 மணிக்கு சூரியன் மேகக் கூட்டத்துக்கு இடையில் இருந்து வெளியே தெரிந்தது. அதனையே சுற்றுலா பயணிகளால் பார்க்க முடிந்தது.

கடலுக்கு அடியில் இருந்து சூரியன் உதயமான காட்சியை புத்தாண்டில் பார்க்க முடியாமல் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

# மாடுபிடி வீரர்கள் காயம் அடைவதை தடுக்க காளைகளின் கொம்புகளில் ரப்பர் கவசங்கள்

மதுரை, ஜன.2

தமிழர்களின் பாரம்பரியம் மிக்க மரபு வழி விளையாட்டுக்களில் ஜல்லிக்கட்டும் ஒன்றாகும். ஏறு தழுவுதல், மஞ்சுவிரட்டு ஆகிய வரிசையில் நம்முடைய பண்பாட்டையும், வீரத்தையும் வெளிப்படுத்தும் வகையில் பொங்கல் பண்டிகையைமுன்னிட்டு இந்த ஜல்லிக்கட்டு போட்டிகள் வெகு விமரிசையாக நடத்தப்படுகிறது.

மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் அதிக அளவிலும், மற்ற மாவட்டங்களில் குறைவான அளவிலும் நடைபெறும் இந்த போட்டிகளை காண உள்ளூர்வாசிகள் மட்டுமின்றி வெளிநாட்டினரும் வருகை தருகிறார்கள். அதன்படி தமிழகம் முழுவதும் சுமார் 350க்கும் மேற்பட்ட இடங்களில் ஜல்லிக்கட்டு நடத்தப்படுகிறது.

அதில் மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டு பேரும், புகழும் வாய்ந்ததாகும். உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை காண சுற்றுலாத்துறை சார்பில் வெளிநாட்டு பயணிகள் அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு தனி கேலரி வசதியும் ஏற்படுத்தி தரப்படுகிறது.



பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 2 வாரங்களே உள்ள நிலையில், காளைகளுக்கு அதன் உரிமையாளர்கள் நீச்சல் பயிற்சி, மண்ணைகுவித்து வைத்து அதில் முட்டி கொம்புகளை தீட்டுதல் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றனர். அதேபோல், மாடுபிடி வீரர்களும் காளைகளை அடக்க பயிற்சி மூலம் தயாராகி வருகிறார்கள்.

இதற்கிடையே ஜல்லிக்கட்டு ஏற்பாடுகளை மறுஆய்வு மேற்கொண்ட இந்திய விலங்குகள் நலவாரியம் கூட்ட நெரிசல்,

காயங்கள் மற்றும் உயிரிழப்புகளை தடுக்க ஆன்லைனில் பதிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்துமாறு வலியுறுத்தி உள்ளது. அரசு வழிகாட்டுதல் படி 55 முதல் 60 காளைகள் வரை மட்டுமே ஜல்லிக்கட்டில் பங்கேற்க வேண்டும்.

ஆனால், அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டுகளில் 600க்கும் மேற்பட்ட காளைகள் களம் இறக்கப்படுகிறது.

இதில் கடந்த 2022ல் நடந்த ஜல்லிக்கட்டில் 9 காளைகளும், 950 மாடுபிடி வீரர்களும் காயமடைந்தனர். தமிழகம் முழுவதும் நடந்த 350 ஜல்லிக்கட்டுகளில் மொத்தம் 8 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையே இந்த ஆண்டு நடைபெற இருக்கும் ஜல்லிக்கட்டு போட்டிக்கு முன்னேற்பாடாக உயிரிழப்புகள் ஏற்படாமல் தடுக்கவும், காயங்களை குறைக்கவும் காளைகளின் கொம்புகளில் ரப்பர் அல்லது பிளாஸ்டிக்கால் உருவாக்கப்பட்ட பாதுகாப்பு கவசம் (ஹார்ன்புஷ்) பொருத்த தமிழக அரசும், விலங்குகள் நலவாரியமும் ஆலோசித்து வருகிறது.

மேலும் போட்டிகளை நடத்தும் விழா கமிட்டிகளுக்கு தமிழக அரசும், விலங்குகள் நலவாரியமும் வழிகாட்டுதல்களை வழங்கி இருப்பதோடு, இந்த பாதுகாப்பு கவசத்தை தயாரிக்க அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

அரசு சார்பில் நடத்தப்படும் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி அவனியாபுரத்தில் 15ந்தேதி பொங்கல் நாளில் நடைபெறுகிறது. 16ந்தேதி பாலமேட்டிலும், 17ந்தேதி அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடக்கிறது.

# நூல் விலையில் மாற்றம் இல்லாததால் ஜவுளி தொழில்துறையினர் மகிழ்ச்சி

திருப்பூர்,ஜன.2

பின்னலாடை தயாரிப்புக்கு மிக முக்கிய மூலப்பொருளாக நூல் இருந்து வருகிறது. நூல் விலையை பொறுத்து ஆடைகளின் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆர்டர்களை பெறுகிற நிறுவனங்கள் அப்போதைய நூல் விலை உள்ளிட்ட செலவுகளை கருத்தில் கொண்டு, ஆடைகளின் விலையை வர்த்தகர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு தெரிவிப்பார்கள். இதன் பின்னர் அவர்கள் கொடுக்கிற ஆர்டர்களின் படி ஆடைகள் தயாரித்து அனுப்பி வைக்கப்படும். நூல் விலை சீராக இருந்தால், வர்த்தகம் எந்த ஒரு தொய்வும் இன்றி இருக்கும். ஆனால் நூல் விலை அடிக்கடி மாற்றம் ஏற்படுவதால், தொழில்துறையினர் பல்வேறுபிரச்சினைகளை சந்தித்து வருகிறார்கள்.



ஏற்கனவே போடப்பட்ட ஒப்பந்தத்தை தாண்டி உற்பத்தி செலவு அதிகரிக்கும் பட்சத்தில், ஆடைகளின் விலையை, நூல் விலையை காட்டி உயர்த்தி கேட்டால், ஆர்டர்கள் ரத்து ஆகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பனியன் தொழில் நடந்து வருகிறது.

இதற்கிடையேதொழில் துறையினர் சற்றும் எதிர்பார்க்காத வகையில், நூல் விலையை நூற்பாலைகள் மாதத்திற்கு இருமுறை அறிவிப்பதாக தெரிவித்துள்ளனர். அதன்படி நடப்பு மாதத்திற்கான (ஜனவரி) நூல் விலையை நூற்பாலைகள் இன்று அறிவித்தனர். இதில் நூல் விலையில் எந்த மாற்றமும் இல்லை. கடந்த மாத நிலையே தொடரும் என நூற்பாலைகள் அறிவித்துள்ளனர். இதனால் திருப்பூர் ஜவுளி தொழில்துறையினர் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அதன்படி நூல் விலையானது (கிலோவுக்கு) 10வது நம்பர் கோம்டு நூல் விலை ரூ.177க்கும், 16ம் நம்பர் ரூ.187க்கும், 20வது நம்பர் ரூ.245க்கும், 24வதுநம்பர்ரூ.257க்கும், 30வதுநம்பர்ரூ.267க்கும், 34வதுநம்பர்ரூ.280க்கும், 40வதுநம்பர்ரூ.300க்கும், 20வது நம்பர் செமி கோம்டு நூல் ரூ.237க்கும், 24வதுநம்பர்ரூ.247க்கும், 30வதுநம்பர்ரூ.257க்கும், 34வதுநம்பர்ரூ.270க்கும், 40வது நம்பர் ரூ.290க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழக பா.ஜ.க. நிர்வாகிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை

திருச்சி, ஜன.2

பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ளன. தேசிய அளவில் அனைத்துகட்சிகளும் தேர்தலை சந்திக்க தயாராகி வருகின்றன.

பா.ஜனதா தலைமையில் வலுவான கூட்டணி உள்ளது. அதை எதிர்க்க காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம் உள்பட பல கட்சிகள் இணைந்து இந்தியா கூட்டணியை உருவாக்கி உள்ளன.

இந்த நிலையில் சமீபத்தில் நடந்து முடிந்த 5 மாநில தேர்தலில் காங்கிரஸ் ஒரு மாநிலத்தில் மட்டுமே வென்றது. பா.ஜனதா 3 மாநிலங்களை கைப்பற்றியது. இந்த வெற்றி பா.ஜனதாவுக்கு கூடுதல் உற்சாகத்தை கொடுத்துள்ளது.

அதே உற்சாகத்துடன் பாராளுமன்ற தேர்தலையும் சந்திக்க தீவிரமாகி வருகின்றன. இதற்காக நாடு முழுவதும் 'வேண்டும் மோடி, மீண்டும் மோடி' என்ற கோஷத்துடன் தேர்தல் பணிகளை தொடங்கி விட்டன.

3வது முறையாக மீண்டும் ஆட்சியை பிடித்து வரலாறு படைக்க பா.ஜனதா வியூகம் அமைத்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த அந்த மாநிலத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கூட்டணி அமைப்பது, தேர்தலுக்கான வியூகங்களை வகுப்பது போன்ற பணிகளில் பா.ஜனதா தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளார்கள்.

தமிழகத்தை பொறுத்தவரை பிரதான கட்சியான அ.தி.மு.க.வுடன் பா.ஜனதா கூட்டணி அமைத்து இருந்தது. 4 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த இந்த கூட்டணியில் கடந்த செப்டம்பர் மாதம் ஏற்பட்ட உரசலை தொடர்ந்து பா.ஜனதா கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேறியது.

தற்போதைய நிலையில் தமிழக அரசியல் களத்தில் பா.ஜனதா தனித்து நிற்கிறது. அதே நேரம் அதைப் பற்றி கவலைப்படாமல் கூட்டணி விவகாரங்களை கட்சி மேலிடம் பார்த்து கொள்ளும் என்று அண்ணாமலை தன்வழியில் கட்சியை பலப்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகிறார்.

இந்த நிலையில் அ.தி.மு.க.வுடனான கூட்டணி முறிந்து 4 மாதங்களுக்கு பிறகு முதல் முறையாக பிரதமர் மோடி நாளை (2ந்தேதி) தமிழகம் வருகிறார். பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நாளை காலை திருச்சி வருகிறார்.

பிரதான கட்சிகளான தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் பா.ஜனதாவை எதிர்த்து களத்தில் நிற்கின்றன. எனவே வருகிற பாராளுமன்ற தேர்தல் தமிழகத்தில் பா.ஜனதாவுக்கு சவாலானதாகவே இருக்கும்.

காலை 10.30 மணிக்கு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 38வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாணவமாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசுகிறார்.

பின்னர் மதியம் 12 மணிக்கு திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் ரூ. 1200 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள சர்வதேச தரத்திலான பன்னாட்டு புதிய விமான முனையத்தை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார். விழாவில் ரூ.19 ஆயிரத்து 850 கோடி திட்டங்களையும் பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். நிறைவடைந்த பணிகளை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.



இந்த 2 நிகழ்ச்சிகளிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கவர்னர் ஆர்.என்.ரவி ஆகியோரும் பங்கேற்க உள்ளனர்.

மோடி அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வந்தாலும் தமிழக அரசியல் நிலவரங்களை அறியவும், அதற்கு ஏற்ப கட்சியினர் முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள் பற்றியும் விவாதிக்க திட்டமிட்டுள்ளார். இதற்காக அரசு நிகழ்ச்சிகள் முடிந்ததும் தமிழக பா.ஜனதா நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

விமான நிலையம் அருகே உள்ள ஓட்டலில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க 31 பேரை தனித்தனியாக தொடர்பு கொண்டு அழைத்துள்ளார்கள்.

தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை, அமைப்பு செயலாளர் கேசவ விநாயகன், முன்னாள் மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன், எச்.ராஜா, துணை தலைவர்கள் நயினார் நாகேந்திரன், சக்கரவர்த்தி, கரு.நாகராஜன், கருப்பு முருகானந்தம், சீனிவாசன், வி.பி.துரைசாமி, எம்.எல்.ஏ.க்கள் எம்.ஆர்.காந்தி, டாக்டர் சரஸ்வதி உள்ளிட்ட 31 பேர் கலந்து கொள்கிறார்கள்.

அ.தி.மு.க. கூட்டணி இல்லாத நிலையில் பா.ஜனதாவின் பலம் எவ்வாறு உள்ளது? கூட்டணி இல்லாமல் தேர்தலை சந்தித்தால் எப்படி இருக்கும்? மக்கள் மனநிலை எப்படி இருக்கிறது? என்பது பற்றி நிர்வாகிகளிடம் கேட்டறிவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதைத் தொடர்ந்து சில செயல் திட்டங்களையும் கட்சியினருக்கு பிரதமர் மோடி அறிவுறுத்துவார் என்று கூறப்படுகிறது.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும் பிரதமர்மோடி திருச்சியில் இருந்து லட்சத்தீவு புறப்பட்டு செல்கிறார்.

பிரதமர் மோடி நிகழ்ச்சிகள் முடிந்ததும் பிற்பகல் 2.30 மணிக்கு மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர்கள் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அண்ணாமலை தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் பிரதமர் மோடியின் ஆலோசனைகளை நிர்வாகிகளுக்கு அண்ணாமலை எடுத்து சொல்கிறார்.

பிரதமர் மோடி வருகையையொட்டி திருச்சி விழாக்கோலம் பூண்டு வருகிறது. விழா நடைபெறும் விமான நிலைய பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்படுகிறது. போலீசார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார்கள்.

# திருப்பணி என்ற பெயரில் கோவில்களின் தொன்மையை அழித்து வருகின்றனர் பொன் மாணிக்கவேல்

ஈரோடு, ஜன.2

ஈரோட்டில் இன்று முன்னாள் சிலை கடத்தல் பிரிவு ஐ.ஜி. பொன் மாணிக்கவேல் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: ஆன்மீகம் அதிகமானால் குற்றம் களையும். வீடுகளில் அமைதி ஏற்படும். தமிழகத்தில் உள்ள சைவ வைணவ கோவில்களின் பழங்கால சொத்துகள் மூலம் ரூ.28 கோடி வருமானம் வருகிறது. இதில் ஒரு கோடி ரூபாயை எடுத்துக் கொண்டு மீதி பணத்தை திருப்பி கோவிலுக்கு வழங்க வேண்டும்.

12 ஆயிரம் அர்ச்சகர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கூட கொடுக்க முடியவில்லை. 22 ஆயிரத்து 600 ஏக்கர் காலி இடத்தில் கடந்த 8 மாதத்தில் மட்டும் வாடகை பாக்கி ரூ.151 கோடி உள்ளது. பழமையான தொன்மையான 5 ஆயிரம் கோவில்களை புதுப்பிப்பதாக திருப்பணி செய்ததாக கூறுகின்றனர். இதில் கமிஷன் அடிக்கிறார்கள்.



திருப்பணி என்ற பெயரில் பழமையான கல்வெட்டுகள் அழிந்து விட்டது. பழனியில் 16ம் நூற்றாண்டிற்கு முன்பான கல்வெட்டுகளை அழிந்து விட்டது. திருப்பணி என்ற பெயரில் தொன்மையை அழித்துக்கொண்டு வருகின்றனர்.

திருப்பணியை இந்து சமய அறநிலையத்துறை செய்ய தகுதி இல்லை. கோவில் புதுப்பிக்கும் பணியை மாநில ஆர்க்காலஜி துறை தான் செய்ய வேண்டும். கோவில்களில் அனைத்தையும் செய்பவர்கள் அர்ச்சகர்கள். இவர்களை காப்பாற்றவில்லை என்றால் கோவில்கள் காலியாகிவிடும். இன்னும் 15 வருடத்தில் 26 ஆயிரம் கோவில்களில் அர்ச்சகர்கள் இருக்க மாட்டார்கள். அர்ச்சகர்களை காப்பாற்ற சம்பளம் கொடுக்க வேண்டும். வசதி இல்லாத 1500 ஆண்டுகளுக்கு முன்பான 10 ஆயிரத்து 652 தொன்மையான கோவில்கள் அனைத்தும் கேட்பாரற்று இருக்கிறது.

பொதுமக்களிடையே ஆன்மீகம் அதிகரித்தால் நாடு நன்றாக இருக்கும். இல்லையென்றால் சீரழியும். சைவ வைணவர்களின் ஒன்றுமை உடைந்து நொறுக்கி உள்ளது. 2012ம் ஆண்டு மட்டும் அமெரிக்காவில் இருந்து 2 ஆயிர்து 622 சிலைகள் மீட்கப்பட்டுள்ளது. ஆனால் 2012ம் ஆண்டு முன்பு ஏன் இந்தளவு சிலைகள் மீட்க முடியவில்லை. அமெரிக்க போலீசாருடன் ஒத்துழைக்கவேண்டும். இதற்கு மத்திய அரசுடன் பேசி மீதமுள்ள சிலைகளை மீட்க வேண்டும்.

உச்சக்கட்ட நேர்மையான அதிகாரிகளை பணியமர்த்த வேண்டிய துறையாக உள்ளது. ஆர்வம் குறைவான அதிகாரிகளை உயர் பதவிகளில் பணியமர்த்தப்பட்டதால் 2020 ல் இருந்து பல முக்கிய வேலைகளை செய்யவில்லை.

கடந்த மாதம் கோவில்களில் இருந்து ரூ.28.49 கோடி எடுத்துள்ளனர். விளம்பரத்திற்கு நான் அடிமை கிடையாது. வெளிநாட்டில் இருந்து சாமி சிலைகள் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 100 நாள் வேலை திட்ட பணியாளர்களுக்கு ஆதார் அட்டை மூலம் சம்பள பட்டுவாடா அமல்

சென்னை ஜன.2

மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளார்கள். இந்த வேலை வழங்கும் திட்டத்தை முறையாக செயல்படுத்தவும் முறைகேடுகளை தவிர்க்கவும் ஆதார் இணைப்பு அவசியம் என்றும் அதன் அடிப்படையிலேயே சம்பளம் வழங்கும் முறையை கடந்த ஆண்டு மத்திய அரசு அறிவித்தது. வேலை திட்ட அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்காக கடந்த ஆண்டில் 5 முறை அவகாசம் நீட்டிக்கப்பட்டது. இறுதிகட்ட கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்தது. இதற்கு மேல் கால அவகாச நீட்டிப்பு கிடையாது என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த 3 ஆண்டுகளில் ஒரு நாளாவது வேலை பார்த்து இருந்தாலே அவர்கள் பணியில் இருக்கும் தொழிலாளர்களாகவே கருதப்படுவார்கள். தற்போது கொண்டு வரப் பட்ட இந்த திட்டத்தின்படி பதிவு செய்து இருந்த 25.25 கோடி தொழிலாளர்களில் 14.35 கோடி பேர் மட்டுமே தகுதியானவர்களாக கண்டறியப்பட்டுள்ளது.

மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அனுப்பியிருந்த சுற்றறிக்கையில் தகுதியான காரணங்களால் பதிவு செய்ய இயலாமல் போனவர்கள் மீண்டும் சேர்க்கலாம் என்று அறிவித்துள்ளது.

கடந்த 21 மாதத்தில் 7.6 கோடி பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. வேலைக்கான அட்டையுடன் ஆதார் கார்டு இணைத்துவிட்டால் அது வங்கி கணக்குடன் இணைந்து இருக்கும். அத்துடன் நிதி வழங்கும் துறையுடனும் இணைக்கப்பட்டிருக்கும்.

இதன் மூலம் தொழிலாளர்களுக்கு விரைவாக சம்பள பட்டுவாடா செய்ய முடியும். வேலை செய்யாமலேயே ஆட்களின் பெயரை எழுதி பணத்தை சுரண்டுவதும் தடுக்கப்படும். ஆதார் அட்டையை பணியாளர் அட்டையுடன் இணைத்திருப்பதன் அடிப்படையிலேயே சம்பளம் பட்டுவாடா செய்யப்படும்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

2.1.2024




## ரசிகர்கள் கவனத்தை ஈர்க்கும் 'பிரம்மயுகம்' படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர்

இந்தி, தெலுங்கு, மலையாள திரையுலகில் இருக்கும் முன்னணி கதாநாயகர்களின் படங்கள் தமிழ் மொழியிலும் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்று வருகின்றன. இந்த வரிசையில் மலையாளநடிகர்மம்முட்டிநடித்துள்ள'பிரம்மயுகம்' படமும் மலையாள மொழியில் மட்டுமின்றி தமிழிலும் வெளியாக இருக்கிறது. மேலும் பல மொழிகளில் வெளியிடவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்தப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தொழில்நுட்ப பணிகள் நடக்கின்றன. படத்தில் வரும் மம்முட்டியின் தோற்றம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில்வரவேற்பைபெற்றுள்ளது.இந்தப்படத்தை ராகுல் சதாசிவன் இயக்கியுள்ளார். இதில் அர்ஜுன் அசோகன், சித்தார்த் பரதன், அமல்டாலிஸ் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சக்கரவர்த்தி ராமச்சந்திரா மற்றும் எஸ்.சஷிகாந்த் ஆகியோர் தயாரித்துள்ளனர்.

சமீபத்தில் மம்முட்டியின் நடிப்பில் வெளியான கண்ணூர் ஸ்க்வாட் வெற்றி பெற்றதால் இந்தப்படத்துக்கும் ரசிகர்களிடம் எதிர்பார்ப்பு அதிகரித்து உள்ளது. இந்நிலையில், புத்தாண்டை முன்னிட்டுஇன்று'பிரம்மயுகம்'படத்தின்பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளி யிட்டுள்ளது. இப்படத்தின் போஸ்டரை மம்முட்டி தனது எக்ஸ் வலை தளப்பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இந்த போஸ்டர் சமூக வலைதளத்தில் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

## பேட்மேன் படத்தில் வில்லனாக மிரட்டிய நடிகர் டாம் வில்கின்சன் காலமானார்



இரண்டு முறை ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட பிரபல ஹாலிவுட் நடிகர் டாம் வில்கின்சன் (வயது 75) நேற்று காலமானார்.

இவர் 1976ம் ஆண்டு வெளியான 'ஸ்முகா' என்ற படத்தின் மூலம் திரைத்துறையில் அறிமுகமானார். இதனை தொடர்ந்து பிரிஸ்ட், ரஷ் ஹவர், ஷேக்ஸ்பியர் இன் லவ், ரைட் வித் டெவில் போன்ற பல திரைப்படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். பேட்மேன் படத்தில் இவர் நடித்த கார்மின் பால்கன் என்ற வில்லன் கதாபாத்திரம் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது.

இரண்டுமுறை ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட இவர் 130க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் நடித்துள்ளார். மேலும் கோல்டன் குளோப், எம்மி விருதுகள் போன்ற பல்வேறு விருதுகளையும் வென்றுள்ளார். இவரின் மறைவுக்கு ஹாலிவுட் பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் வருத்தம் தெரிவித்து பதிவிட்டு வருகின்றனர்.



## பிரபல சின்னத்திரை நடிகர் திடீர் மரணம்... ரசிகர்கள் அதிர்ச்சி

தனியார்தொலைக்காட்சியில்ஒளிபரப்பானகனாகாணும்காலங்கள்தொடரில்பி.டி ஆசிரியர்கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமடைத்தவர் நடிகர் அன்பழகன். அந்த தொடரில் அவர் கூறும் 'எஸ் சார், நோ சார், ஒகே சார்' என்ற வசனம் பலரின் கவனத்தை ஈர்த்தது.

அதனை தொடர்ந்து ரெட்டைவால், தாயுமானவன், மாப்பிள்ளை, காற்றுக்கென்ன வேலி போன்ற பல்வேறு தொடர்களில் சிறிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். மேலும் சமீபத்தில் சீதாராமன், அண்ணா உள்ளிட்ட தொடர்களில் முக்கிய கதாபாத்திரத்திலும் நடித்திருந்தார்.

ராணிப்பேட்டை மாவட்டம் கண்டிகை பகுதியை சேர்ந்த நடிகர் அன்பழகன் நேற்று இரவு உடல்நலக்குறைவால் காலமானார். அவரின் மறைவு சின்னத்திரை பிரபலங்கள் மற்றும் ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## 11 ஆண்டுகளாக கலக்கும் 'கங்னம் ஸ்டைல்'... யூடியூபில் புதிய சாதனை...!



கூகுள்நிறுவனத்திற்கு சொந்தமான யூடியூப் தளத்தில் பல்வேறு மொழி பாடல்களை உலகம் முழுவதும் உள்ள ரசிகர்கள் பார்த்து மகிழ்ந்து வருகின்றனர். அப்படி வெளியாகும் பாடல்களில் அவ்வப்போது ஒருசில பாடல்கள் உலகம் முழுவதும் வைரலாகி பல மில்லியன் பார்வைகளை கடந்து சாதனைகளை படைத்து வருகின்றன.

அந்தவகையில் கேபாப் எனப்படும் தென் கொரிய பாடல்களுக்கு உலகம் முழுவதும் பல கோடி ரசிகர்கள் உள்ளனர். அதிலும் குறிப்பாக பி.டி.எஸ் எனப்படும் பாடகர் குழு வெளியிடும் பாடல்கள் பெண் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று அதிக பார்வைகளை பெறுவது வழக்கமான ஒன்றாகவே உள்ளது.

இந்த நிலையில் 11 ஆண்டுகளுக்கு முன்பு வெளியாகி உலகம் முழுவதும் வைரலான 'கங்னம் ஸ்டைல்' என்னும் கொரிய பாடல் யூடியூபில் 500 கோடி பார்வைகளை கடந்து சாதனையை படைத்துள்ளது. .

கடந்த 2012 ஆண்டு தென்கொரியாவை சேர்ந்த பிஎஸ்ஒய் (PSY) என்பவர் குரலில் வெளியாகி பட்டி தொட்டி எங்கும் ஹிட் அடித்த பாடல் 'கங்னம் ஸ்டைல்'. இந்த பாடல் வெளியான நாள் முதலே பல்வேறு ரசிகர்களால் விரும்பப்பட்டு உலகம் முழுவதும் ட்ரெண்ட் ஆனது.

இந்த பாடல் பலரின் செல்போன் ரிங்டோனாகவும் அந்த காலகட்டத்தில் இருந்தது. பள்ளி மற்றும் கல்லூரி விழாக்களில் மாணவர்கள் நடனமாட இந்த பாடலை அதிகம் பயன்படுத்தினர். தொலைக்காட்சிகளில் அடிக்கடி ஒளிபரப்பப்பட்டு சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரின் கவனத்தையும் இந்த பாடல் கவர்ந்தது.

இந்த பாடலை தற்போது வரை பல ரசிகர்கள் யூடியூப் தளத்தில் பார்த்து ரசித்து வருகின்றனர். இதன் காரணமாக இந்த பாடல் தற்போது யூடியூப் தளத்தில் 500 கோடி பார்வைகளை கடந்த முதல் பாடல் என்ற சாதனையை பெற்றுள்ளது.



## இது தான் நான் 2023ம் ஆண்டில் கற்றுக்கொண்டது... ரசிகர்களுக்கு நடிகை கங்கனா ரணாவத் அறிவுரை

பாலிவுட் திரையுலகின் முன்னணி நடிகையான கங்கனா ரனாவத், ஜெயம் ரவி நடிப்பில் வெளியான 'தாம் தூம்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். அதன்பின்னர் மறைந்த முதல்அமைச்சர் ஜெ.ஜெயலலிதா வாழ்க்கை வரலாறாக உருவாகி வெளியான 'தலைவி' படத்தில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார்.

இவர் நடிப்பில் இந்த ஆண்டு தமிழில் 'சந்திரமுகி 2' திரைப்படமும் மற்றும் இந்தியில் 'தேஜஸ்' திரைப்படமும் வெளியாகின. இரண்டு படங்களும் எதிர்மறையான விமர்சனங்களை பெற்று தோல்வியை சந்தித்தது. இந்த ஆண்டு 'மணிகர்ணிகா பிலிம்ஸ்' நிறுவனம் சார்பில் இவர் தயாரித்த டிக்கு வெட்ஸ் சிரு திரைப்படமும் மோசமான விமர்சனங்களையே பெற்றது.

இந்நிலையில் நடிகை கங்கண ரணாவத் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் ரசிகர்களுக்கு சில அறிவுரைகளை வழங்கியுள்ளார். அவர் அந்த பதிவில், 'நான் வீட்டை விட்டு வெளிய இருப்பதாய் விரும்புகிறேன், நான் பல மைல்கள் கடந்து எனக்கான கனவு இல்லங்கள் மற்றும் பண்ணை வீடுகளை கட்டி உள்ளேன்.

வீட்டில் இல்லாதபோது தான் நான் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் உணர்ந்தேன். நாம் இந்த உடலை சார்ந்தவர்கள் அல்ல, வாழ்க்கை என்பது ஒரு விரைவான கட்டம் என்பது எனக்கு இப்போதுதான் தெரிய ஆரம்பித்துள்ளது. எப்போதும் வீட்டில் இருக்க முயற்சிக்க கூடாது. அதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இது தான் நான் 2023ம் ஆண்டில் கற்றுக்கொண்டது. நீங்கள் செல்லும் இடங்கள் எல்லாம் வீட்டிற்கு செல்வதை போன்று நினைத்துக் கொள்ளுங்கள்' என்று பதிவிட்டுள்ளார்.

## சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து டேவிட் வார்னர் ஓய்வு...!



ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் டேவிட் வார்னர் (வயது 37). இவர் 161 ஒருநாள் போட்டிகளில் ஆடி 6 ஆயிரத்து 932 ரன்கள் குவித்துள்ளார். 111 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 8 ஆயிரத்து 695 ரன்கள் குவித்து இருக்கிறார். மேலும், 99 டி20 போட்டிகளில் ஆடி 2 ஆயிரத்து 894 ரன்கள் அடித்துள்ளார்.

இதனிடையே, ஆஸ்திரேலியா பாகிஸ்தான் இடையேயான டெஸ்ட் தொடரில் டேவிட் வார்னர் இடம்பெற்றுள்ளார். இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி டெஸ்ட் நாளை மறுதினம் (3ம் தேதி) சிட்னி மைதானத்தில் தொடங்க உள்ளது. இப்போட்டியுடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக டேவிட் வார்னர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில், ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வுபெறுவதாக டேவிட் வார்னர் அறிவித்துள்ளார். சிட்னி டெஸ்ட்போட்டியுடன்டெஸ்ட்மற்றும்ஒருநாள்கிரிக்கெட்டில்இருந்துஓய்வுபெறுவதாகவார்னர்அறிவித்துள்ளார். அதேவேளை, 2025ம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கு அழைப்பு இருந்தால் அதில் விளையாட தயார் எனவும் வார்னர் தெரிவித்துள்ளார். மேலும், ஆஸ்திரேலியா அணிக்காக டி20 கிரிக்கெட்டில் தொடர்ந்து விளையாடுவேன் எனவும் தெரிவித்துள்ளார்.

## 2023ம் ஆண்டில் அதிக கோல்...முதலிடம் பிடித்த ரொனால்டோ..!



போர்ச்சுகல் கால்பந்து அணியின் கேப்டன் ரொனால்டோ சவுதிஅரேபியாவைச் சேர்ந்த அல் நேசர் கிளப்புக்காக விளையாடி வருகிறார். 2023ம் ஆண்டில் அவர் தேசிய அணி மற்றும் கிளப்புக்காக சேர்த்து மொத்தம் 54 கோல்கள் அடித்துள்ளார்.

இதன் மூலம் கடந்த ஆண்டில் அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் முதலிடத்தை ரொனால்டோ பிடித்துள்ளார். இங்கிலாந்தின் ஹாரி கேன், பிரான்சின் கிலியன் எம்பாப்வே ஆகியோர் தலா 52 கோலுடன் அடுத்த இடத்தில் உள்ளனர்.

இதுதொடர்பாகரொனால்டோகூறியதாவது,தனிப்பட்டமுறையிலும், ஒரு அணியாகவும் 2023ம் ஆண்டு எனக்கு சிறப்பாக அமைந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அல் நேசர் கிளப்புக்காகவும், போர்ச்சுகல் அணிக்காகவும்நிறையகோல்கள்அடித்துவெற்றிக்குஉதவியிருக்கிறேன். 2024ம்ஆண்டிலும்இதேபோல்நிறையகோல்கள்அடிக்கமுயற்சிப்பேன்'. இவ்வாறு அவர் கூறினார்.

## புரோ கபடி லீக்; தெலுங்கு டைட்டன்ஸ் புனேரி பால்டன் அணிகள் மோதல்



10வது புரோ கபடி லீக் தொடர் கடந்த 2ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் பெங்கால் வாரியர்ஸ், பெங்களூரு புல்ஸ், தபாங் டெல்லி, குஜராத் ஜெயன்ட்ஸ், அரியானா ஸ்டீலர்ஸ், ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ், பாட்னா பைரேட்ஸ், புனேரி பால்டன், தமிழ் தலைவாஸ், தெலுங்கு டைட்டன்ஸ், யு மும்பா மற்றும் உ.பி.யோத்தாஸ் ஆகிய 12 அணிகள் விளையாடுகின்றன.

இந்நிலையில் இந்த தொடரில் இன்று 2 லீக் ஆட்டங்கள் நொய்டாவில் நடைபெறுகின்றன. அதில் இரவு 8 மணிக்கு தெலுங்கு டைட்டன்ஸ் புனேரி பால்டன் அணிகள் மோதுகின்றன. இதையடுத்து இரவு 9 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் உ.பி. யோத்தாஸ் பாட்னா பைரேட்ஸ் அணிகள் மோத உள்ளன.

## ஜூனியர் சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட்; ஜேப்பியார் அணி சாம்பியன்..!



இந்தியா சிமெண்ட்ஸ் சார்பில்பள்ளிஅணிகளுக்கு இடையிலான 8வது ஜூனியர் சூப்பர் கிங்ஸ் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின், சென்னை மண்டலத்திற்கான இறுதி சுற்றில் ஜேப்பியார் மெட்ரிக் லாலாஜி மெமோரியல் ஒமேகா பள்ளி அணிகள் மோதின.

இதில் முதலில் பேட் செய்த லாலாஜி அணி 19.5 ஓவர்களில் 101 ரன்னில் ஆல் அவுட் ஆனது. சச்சின், அரிஷ் ரமலான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். தொடர்ந்து ஆடிய ஜேப்பியார் அணி 18.4 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 103 ரன்கள் சேர்த்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் கோப்பையை வசப்படுத்தியது.

மோகன பிரசாத் 38 ரன்கள் எடுத்து வெற்றிக்கு வித்திட்டதுடன் ஆட்டநாயகன் விருதையும் பெற்றார். ஜேப்பியார், லாலாஜி அணிகள் நெல்லையில் வருகிற 22 ந்தேதி தொடங்கும் 2வது கட்ட போட்டிக்கு தகுதி பெற்றன.பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் சென்னை சூப்பர் கிங்ஸ் கிரிக்கெட் வீரர் முகேஷ் சவுத்ரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கு பரிசுகளை வழங்கினார்.

## தொடரை கைப்பற்றப்போவது யார்..? கடைசி டி20 போட்டியில் ஆப்கானிஸ்தான் யுஏஇ அணிகள் இன்று மோதல்..!



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி யுஏஇ யில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடி வருகிறது.

இதில் முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தானும், 2வது போட்டியில் யுஏஇ அணியும் வெற்றி பெற்றுள்ளன. இதன் காரணமாக தொடர் 11 என சமனில் உள்ளது. இந்நிலையில் டொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் கடைசி டி20 போட்டி நாளை நடைபெறுகிறது.

இன்றுநடைபெறும்ஆட்டத்தில்யுஏஇஅணியைவீழ்த்திதொடரைகைப்பற்றும் முனைப்பில் ஆப்கானிஸ்தானும், அதேவேளையில் கடந்த ஆட்டத்தை போல இந்த ஆட்டத்திலும் ஆப்கானிஸ்தானுக்கு அதிர்ச்சி அளித்து தொடரை கைப்பற்ற யுஏஇ அணியும் ஆட உள்ளதால் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது. இந்திய நேரப்படி ஆட்டம் நாளை இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.



குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது

விளக்கம்:

நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறிநின்றபெரியோர்,ஒருகணப்பொழுதே சினம் கொள்வார் ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிதாகும்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.